வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர் - 02 | இதழ் - 26 | 15.08.2024 - 22.08.2024 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | ஊக்குவிப்பு : ரூ.80.00



# தமிழ் மக்களை தேசமாகத் திரட்டவே பொது வேட்பாளர்!

பக்கம் 04

"தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரளாகும். தங்களை தேசமாக உணரும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உணர்வே தேசியம் எனப்படுகின்றது. அக்கூட்டு உணர்வுக்கு தலைமை தாங்குவதுதான் தேசியவாத அரசியல். தமிழ் பொது வேட்பாளர் தெரிவின் முதன்மை நோக்கமும் அதுதான்."



# ரணிலின் தந்திரத்தில் அலைபடும் ஆடுகள்!

பக்கம் 06



ஒரே நாளில் குறைந்த விலையில்
இந்தியாவிற்கான வீசா
மேலும் மலேசியா, தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளுக்கான சுற்றுலா விசா ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

ARUN WINGS
TRAVELS & TOURS
AIR TICKETS | VISA SERVICES | ETA VISA | HOLIDAY PACK
TRAVEL INSURANCE | TRAVEL ILTINERARY
ஒரு வருடத்திற்கான விசா | இலகு ஆவணங்கள் |
விரைவான சேவை | சகல நாடுகளுக்குமான மிகக்குறைந்த
விலையில் விமானப்பயணச்சீட்டு
076 666 8680 | 076 847 2458
143,Temple Road, Jaffna. | E-Mail : arunwingslanka@gmail.com

# சவாலை முறியடிப்பதே மக்கள் பொறுப்பு



பக்கம் 10

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# தீர்மானகரமான முடிவு?

இலங்கையின் புதிய ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தலில் மும்முனைப் போட்டியே நிலவும் என்ற எதிர்வு கூறல்கள் வெளிவந்திருந்தாலும் இதுவரையில் 25பேர் கொண்டபட்டியல் வரை அது நீண்டிருக்கிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசாநாயக்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணியின் சார்பில் முன்னாள் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட் மார்சல் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா, தொழிலதிபர் தம்மிக்க பெரேரா, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர் ரொசான் ரணசிங்க, மிகிந்தலை ரஜமகா விகாரையின் தம்மரத்ன தேரர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லிகைப்பூ சந்தி திலகராஜா, தமிழ்ப் பொதுவேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் என அப்பட்டியல் நீண்டு சென்றுகொண்டிருக்கிறது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஆதரவினை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அது நடைபெறவில்லை. இருப்பினும் தற்போதும் பேச்சுக்கள் நடைபெற்றுவருகின்றன. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னரே தம்முடைய கட்சியின் இருப்பைமையப்படுத்தியதாக தனித்தே களத்தில் இறங்கும் நிலைப்பாட்டினை அக்கட்சி வெளியிட்டிருந்தது. ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்படலாம் என்ற தகவல்கள் வெளிவந்திருந்த நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டதனையடுத்து உடனடியாக ஏனைய கட்சிகள் தங்களுடைய நிலைப்பாடுகளை வெளிப் படுத்திவருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனு கோரப்பட்டவுடன் ரணில் முதலாவதாக தன்னுடைய கட்டுப்பணத்தினைச் செலுத்தினார். சிறிலங்கா பொதுஜன பெரமுன மறுப்பை வெளியிட்டதையடுத்து அக்கட்சியின் பெரும்பாலான உறுப் பினர்கள் தங்களது ரணிலுக்கான ஆதரவினை அறிவித் திருந்தனர். இப்போதும் வேறும் பலர் தங்களது ஆதரவினை வெளியிட்டு வருகின்றனர்.

பெரும்பான்மை மக்களின் வாக்குகளை இலக்கு வைக்கும் பிரதான வேட்பாளர்கள் சிறுபான்மை மக்களின் வாக்குகளையும் கவரக்கூடிய வகையில் தங்களது முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்குக்கான விஜயங்களை மேற்கொண்டு வருகிறார். தமிழ் மக்கள், மலையக மக்கள், முஸ்லிம் மக்களது அரசியல் கட்சிகள் தமது மக்களுக்கான உரிமைசார் விடயங்களை முன்னிறுத்தி ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தம்முடைய முன்மொழிவுகளுடன் ஆதரவுகளைக் கொடுக்க முன்வந்து கொண்டிருக்கின்றன.

மலையக மக்களின் அரசியல் கட்சிகளான தமிழர் முற்போக்கு கூட்டணி தமது ஆதரவினை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கும் வகையிலான முடிவுக்கு வந்திருக்கிறது. தற்போது அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருக்கின்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தம்முடைய ஆதரவினை தற்போதைய ஜனாதிபதிக்கே வழங்கவேண்டிய கடப்பாட்டில் உள்ளனர். அக்கட்சியின் தலைவரும் கிழக்கு ஆளுனருமான செந்தில் தொண்டமான் ரணிலுக்கு ஆதரவு பிரச்சாரத்தினைத் தொடங்கிவிட்டார்.

அமைச்சரான டக்ளஸ் தேவானந்தாவினுடைய ஆதரவு தற்போதைய ஜனாதிபதிக்கே என்று அறிவித்துவிட்டார். அங்கஜன் ராமநாதனின் முடிவு பொதுஜன பெரமுனவின் முடிவிற்குள் அகப்பட்டுமிருக்கின்ற நிலையில் அவரது முடிவு இறுதி நேரத்திலேயே தெரியவரும். எதிர்க்கட்சிக் கூட்டணியில் இருக்கின்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கே ஆதரவளிப்பர் எனத் தெரிகிறது. ஆனால், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிர ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ்த் தேசியக் கட்சி போன்ற கட்சிகள் தமிழ் பொதுவேட்பாளர் குறித்த பிடிக்குள் இருக்கின்றனர். ஆனாலும் அவர்களது இரண்டாம் விருப்பு ரணிலாகவே இருக்கலாம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஸ்கரித்தல் என்ற முடிவில் இருக்கிறது.

வடக்கு கிழக்கிலுள்ள அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும், இராஜாங்க அமைச்சர்களும் ரணிலுக்கே ஆதரவளிப்பர் எனக் கூறலாம். தவிர எதிர்க்கட்சியாக இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இம்முறை ரணில் விக்கிரமசிங்க கோடிக் கணக்கில் ஒதுக்கீடுகளை வழங்கினார். இது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தாக்கம் செலுத்தவே செய்யும்.

ஆனால், எதிர்க்கட்சி கூட்டணியில் இருக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் ஏதோ ஒருவகையில் சஜித் பிரேமதாசவுக்கே ஆதரவு வழங்குவார்கள் என்று நம்பினாலும் இறுதி நேரத்தில் அதில் மாற்றம் ஏற்படலாம். அதேநேரத்தில் அமைச்சராக இருந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து உறுப்புரிமை நீக்கப்பட்டு தற்போது வடமேல் மாகாணத்தின் ஆளுநராகச் செயற்பட்டு வரும் ஹாபிஸ் நசீர் அகமட் ஜனாதிபதிக்கே தன்னுடைய ஆதரவினை அறிவிப்பார். இந்த நம்பிக்கையிலேயே ரணில் விக்கிரமசிங்க ஆளுநர் பதவியை வழங்கியிருந்தார். காதர் மஸ்தான் ஜனாதிபதிக்கே தன்னுடைய ஆதரவினை வழங்குவார்.

தம்முடைய அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள் வதிலேயே தொடர்ந்தும் முயற்சித்துவருகின்ற தமிழர்களும், அவர்களுடைய அரசியலை நகர்த்துகின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக பா.அரியநேத்திரனை நிறுத்தியிருக்கின்றன. இதில் இலங்கை தமிழ் அரசுக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன மாற்று நிலைப்பாட்டில் இருக்கின்றன. இருந்தாலும் பல்வேறு முயற்சிகளை இதுவரையில் செய்துவிட்ட தமிழர்கள் தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்தை ஒருவகையில் தமது அரசியல் அபிலாசை நிறைவேற்றுவதற்கான காய் நகர்த்தலாகவே மேற்கொள்கின்றனர் என்பது வெளிப்படையானது. புலம்பெயர் நாடுகளிலுள்ளவர்களும் வடக்கு கிழக்கு சிவில் அமைப்புகளும், புத்திஜீவிகளும், இன்னும் பலரும் இணைந்து இந்த நகர்த்தலை மேற்கொண்டுள்ளனர்.

யுத்தம் மௌனிக்கப்பட்ட கையோடு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் இவ்வாறான முயற்சிகளை மேற்கொள்ளாது இப்போது மேற்கொள்வது பயனற்றது என்பது மாற்று அணியின் நிலைப்பாடு. யுத்தம் மௌனித்த கையோடு நடைபெற்ற தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என்பதற்காக யுத்தத்தை வழிநடத்திய பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் மகிந்தவை எதிர்க்கவேண்டும் என்பதற்காவே ரணில் கூட்டணியின் ஆதரவில் நிறுத்தப்பட்ட மைத்திரிபாலவுக்கு தமிழர்கள் வாக்களித்தார்கள். கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் பாதுகாப்புச் செயலாளராக இருந்து யுத்தத்தை வழிநடத்திய கோத்தபாயவுக்கு எதிராக சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தார்கள்.

தொடர்ச்சியாக எதிர்ப்புணர்வினையே காண்பித்து வந்து கொண்டிருந்த தமிழர்கள் இப்போது வேறு ஒரு பரிமாணத்தில் நகர்கின்றார்கள்.

ஏதோ ஒரு நிச்சயமான நம்பிக்கையுடனேயே ரணில் விக்கிரமசிங்க இந்த தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்திருக் கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. அவருடைய வெற்றி எவ்வாறு சாத்தியமென்பது நிச்சயப்படுத்த முடியாததே. தற்போதைய அரசியல் களம் திறந்து விட்டிருக்கும் வெளி யாருக்கானது என்பது மக்கள் கையிலேயே தங்கியிருக்கிறது. தமிழர்களின் முயற்சிக்கும், இலங்கையின் பெரும்பான்மை தேசிய அரசியலுக்கும் நடக்கும் போட்டி தீர்மானகரமானதாகவே இருக்கும். அத்தீர்மானத்திற்காவே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்.

# சுமந்திரனின் ஏமாற்றுப் பஞ்சதந்திரம்



ஒரு சிங்கம்,
நரியிடம் சொன்னது,
“எனக்கு சாப்பிட
ஏதாவது கொண்டு வா.
உனக்கு சில எலும்பு
துண்டுகள் தருகிறேன்”

நரி ஒரு செம்மறி ஆட்டிடம் சென்று சொன்னது “சிங்கம் உன் பிரச்சினை எல்லாம் தீர்த்து உனக்கும் முடிசூட்ட அழைத்து வரச்சொன்னது”

செம்மறி ஆடும் நரியை நம்பி சென்றது.

செம்மறி ஆட்டைக் கண்டதும் சிங்கம் அதனைத் தாக்கியது, அதனால் செம்மறி ஆட்டின் காதுகள் அறுபட்டாலும், அது தப்பித்து விட்டது.

செம்மறி ஆடு நரியிடம் சொன்னது: “நீ என்னை ஏமாற்றிவிட்டாய். சிங்கம் என்னை கொல்லப் பார்த்தது”

அதற்கு நரி சொன்னது: “சேச்சே, உன் தலையில் கிரீடம் சூட்டவே, சிங்கம் உன் காதுகளை அகற்றியது. வா மீண்டும் சென்று கிரீடம்” வேண்டுவோம்.

செம்மறி ஆட்டுக்கு அது சரி எனப்பட்டது, அதனால் திரும்பிச் சென்றது.

மீண்டும் செம்மறி ஆட்டைத் தாக்கிய சிங்கம், இம்முறை அதன் வாலை அறுத்தது.

மீண்டும் தப்பித்து நரியிடம் சொன்னது: “நீ பொய் சொல்கிறாய் இதோ பார், சிங்கம் என் வாலை அறுத்துவிட்டது”

நரி சொன்னது: “நீ அரியாசனத்தில் வசதியாக அமர வேண்டும் என்பதற்காகவே சிங்கம் உன் வாலை அகற்றியது. மீண்டும் செல்வோம். வேண்டும் அரியாசனம்”

நரி செம்மறி ஆட்டை மீண்டும் அழைத்து சென்றது.

இந்த முறை, சிங்கம் செம்மறி ஆட்டை பிடித்து கொன்றது.

சிங்கம் நரியிடம் சொன்னது: “பலே பலே, எப்படி சிக்கி சீரழிந்தாலும், திரும்ப செம்மறி ஆட்டை அழைத்து வந்துவிட்டாயே. போய் செம்மறி ஆட்டின் தோலை உரித்து, அதன் மூளை, நுரையீரல், கல்லீரல் மற்றும் இதயத்தைக் கொண்டு வா”

நரி செம்மறி ஆட்டின் தோலை உரித்து, அதன் மூளையை சாப்பிட்டது. நுரையீரல், கல்லீரல் மற்றும் இதயத்தை சிங்கத்திற்கு கொண்டு வந்தது.

சிங்கம் கோபமடைந்து கேட்டது: “மூளை எங்கே?”

நரி பதிலளித்தது: “அந்த செம்மறி ஆட்டுக்கு மூளை இல்லை, மூளை இருந்திருந்தால், காதையும், வாலையும் இழந்த பின்னர் உங்களை நம்பி வந்திருக்குமா?”

**குறிப்பு - இந்த பஞ்ச தந்திரக் கதையை படித்ததும் ரணில் தீர்வு தருவார் என தமிழ் மக்களை அழைக்கும் சுமந்திரன் உங்கள் நினைவுக்கு வந்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.**

# ஒட்டுமொத்த தமிழர்களுக்காகவே தமிழ்ப் பொது வேட்பாளர்



## தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் எம்.பி தெரிவிப்பு

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது நாங்கள் ஜனாதிபதியாக வரமுடியும் என்ற அடிப்படையில் எழுந்த விடயம் அல்ல. அதற்கப்பால் எங்களது பிரச்சினைகளை தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் கொண்டு செல்வதுடன், கொண்டு செல்லப்படும் கோரிக்கைகள் முற்று முழுதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே எங்களின் முக்கிய நோக்கம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய ஒரே ஒரு பேசுபொருளாக இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் 25க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தாலும், வடக்கு கிழக்குத் தமிழ் மக்களை மையமாக வைத்து ஒட்டுமொத்த தமிழர்களுக்குமாக தமிழ்ப் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அவர்களின் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

தற்போது உண்மையிலேயே தமிழ் பொது வேட்பாளர் தேவை என்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. அது கடந்த காலங்களிலே இந்த நாட்டை மாறி மாறி ஆண்ட அரசாங்கங்களினாலும், 1978ம் ஆண்டு நிறைவேற்று ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டதில் இருந்து ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு ஜனாதிபதிகளும் தமிழ் மக்களது பிரச்சினைகளை ஏறெடுத்தும் பார்க்காமல் தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என்பதைக் கூட கணக்கெடுக்காத நிலையிலேயே தமிழ்ப் பொது வேட்பாளர் தேவை என்ற நிலைப்பாடு மக்கள் மத்தியிலே தோற்றம் பெற்றது. இந்நிலைப்பாடு தமிழ் மக்களது பிரச்சினை தீர்க்கப்படவில்லை, தற்போதும் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே இங்கு நடத்தப்படுகின்றார்கள் என்பதையும், 2009க்கு முன்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றாக இருந்ததைப் போன்று தற்போதும் ஒன்றாக நின்று தமிழ் மக்களின் பிரச்சனைகளை வெளிக்கொணர வேண்டும் என்ற அடிப்படை உணரப்பட்டே தோற்றம் பெற்றது.

இதனூடாக தென்னிலங்கையிலே ஜனாதிபதியாக வர ஆசைப்படும் வேட்பாளர் எங்களுடன் பேரம்பேசுகின்ற ஒரு நிலைப்பாடு உருவாகலாம் என்ற நோக்கமும் இதனுள் உண்டு. பெரும்பாலும் சிங்களப் பகுதிகளிலே நான்கு பேருக்கிடையில் ஒரு போட்டி நிலவக் கூடிய சந்தர்ப்பம் இருக்கின்றது. இதில் வெல்லகூடிய வேட்பாளர்கள் எங்களுடன் பேசுவதற்கான காலமும் தற்போது இருக்கின்றது.

எங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்கு, பரிசீலிப்பதற்கான, நியாயமான தீர்வான்றை இவர்கள் முன்வைப்பார்களாயின் நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தைக்குச் செல்வது உகந்ததாக இருக்கும் என்பதே என்னுடைய தனிப்பட்ட நிலைப்பாடாகும்.

ஏனெனில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது நாங்கள் ஜனாதிபதியாக வரமுடியும் என்ற அடிப்படையில் எழுந்த விடயம் அல்ல. அதற்கப்பால் எங்களது பிரச்சினைகளை தேசத்திற்கும், சர்வதேசத்திற்கும் கொண்டு செல்வதுடன், கொண்டு செல்லப்படும் கோரிக்கைகள் முற்று முழுதாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே எங்களின் முக்கிய நோக்கம். அந்த அடிப்படையில் எங்கள் கோரிக்கைளை நிறைவேற்றுவதற்கு வேட்பாளர்களில் எவராவது பரிசீலிப்பார்களாக இருந்தால், அதற்கான உத்தரவாதங்களைத் தருவார்களாக இருந்தால், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்திய தரப்பினரை பேசுவதற்கு அழைத்தால் அவர்களுடன் பேச வேண்டிய தேவைப்பாடும் எங்கள் மத்தியில் இருக்கின்றது. அவ்வாறு எங்கள் கோரிக்கைகள் நியாயமாகப் பரிசீலிக்கப்படாதவிடத்து, தமிழ் மக்களாகிய நாங்கள் ஒற்றுமையாக இருந்து இன்னும் சிங்களத் தரப்பிலே ஜனாதிபதியாக வருபவர்கள் எங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தயாராக இல்லை என்ற விடயத்தை உறுதியாக வெளி உலகத்திற்குச் சொல்வதற்கும், எமது ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கும் இது ஒரு சந்தர்ப்பமாக இருக்கும்.

இந்த நிலையில் நாங்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை முன்னெடுத்தது சரியானது என்பதை நியாயப்படுத்தக் கூடிய சூழ்நிலையும் இங்கு உருவாகும் என்று தெரிவித்தார்.

# தமிழ்ப் பொதுவேட்பாளர் பின்வாங்கப்போவதில்லை

## புளொட் தலைவர் தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் நிச்சயம் போட்டியிடுவார், கடைசி நேரத்தில் பின் வாங்கப்போவதில்லை என்று புளொட் அமைப்பின் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்ப் பொதுவேட்பாளர் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் அவர் நிராகரித்துள்ளார்.

"தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் இந்திய தரப்பில் நேரடியாக எவ்வித கருத்தும் முன்வைக்கப்படவில்லை.

அவர்களைப் பொறுத்தமட்டில் இது உங்களின் உள்ளகப்பிரச்சினை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர், இது பற்றி நாங்கள் கேட்டபோதுகூட அந்தப் பதிலே வந்தது. என்னிடம் எவ்வித கருத்தும் கூறப்படவில்லை. வேறு தரப்பினர்களிடம் கூறினார்களா எனத் தெரியாது தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் ஆராய்வதற்கு, பணிகளை முன்வைப்பதற்கு குழுவொன்று உள்ளது அந்தக்குழுவால் விரைவில் அதற்குரிய பணி செய்து முடிக்கப்படும்.

எமது பிரச்சினை தீர்க்கப்படவில்லை, அது இன்னமும் கொதி நிலையிலேயே உள்ளது என்பதை தென்னிலங்கைக்கும் உலகுக்கும் காட்டவே தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார்.

# மக்கள் பிரதிநிதிகள் அனைவரதும் அரசியல் எதிர்காலம் பாதுகாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு!



ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு ஆதரவளிக்க முன் வந்துள்ள மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரினதும் அரசியல் எதிர்காலம் பாதுகாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணிலை ஆதரித்துள்ள உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் மற்றும் கட்சிப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி ரணிலுக்கும் இடையிலான சந்திப்பு கண்டியில் இடம்பெற்றது. இதன் போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக ஜனாதிபதி ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை பாராட்டிய உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியின் வெற்றியை உறுதிப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்று ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

உள்ளூராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் மற்றும் அமைப்புகளின் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமும் இதன்போது ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான லொஹான் ரத்வத்தே, அநுராத ஜயரத்ன, ஜானக வக்கும்புர, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார உள்ளிட்ட பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தேர்தல் முறைப்பாடுகளை பக்கசார்பின்றி விசாரிக்குக!

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

தேர்தல் காலப்பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பக்கச்சார்பின்றி விசாரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

தேர்தல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், தேர்தல் காலப் பகுதியில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பக்கச்சார்பானவையாகவோ அல்லது குறித்தவொரு தரப்பினருக்கு சாதகமானவையாகவோ அமையக்கூடாது.

அதேபோன்று அரசியல் காரணங்களால் அல்லது வேறு அழுத்தங்களாலும் இம்முறைப்பாடுகளை விசாரணையின்றிப் புறந்தள்ளுவது அரசியலமைப்பின் 12ஆவது சரத்தை மீறும் செயலாகும்.

அதேவேளை வெறுப்புணர்வுப் பேச்சுக்கள் தொடர்பில் சட்டத்துக்கு அமைவாகப் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும், தேர்தல் பிரசார நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சட்டங்களை எவ்வித பக்கச்சார்புமின்றி சகல வேட்பாளர்களுக்கும் ஒரேவிதமாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

அத்தோடு தேர்தல் பிரசாரம் மற்றும் நடவடிக்கைகளுக்காக ஒலிபெருக்கியைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் போது உரிய சகல சட்டங்கள் மற்றும் நடைமுறைகளும் பின்பற்றப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியம்



# தமிழ் மக்களை தேசமாகத் திரட்டவே பொது வேட்பாளர்

தமிழ்ப்பொது வேட்பாளர் யார் என்ற கேள்விக்கு இப்பொழுது விடை கிடைத்து விட்டது. ஆனால் கடந்த சில வாரங்களாக அந்த கேள்வியை முன்வைத்து பல்வேறு விதமாக விமர்சிக்கப்பட்டது. தமிழ் மக்கள் பொதுச்சபையும் கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய பொதுக் கட்டமைப்பினால் ஒரு பொது வேட்பாளரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது ஒரு மிகப்பெரிய பலவீனமாக உருப்பெருக்கிக் காட்டப்பட்டது. ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

தமிழ் மக்கள் பொதுச்சபை என்று அடக்கப்படும் அமைப்புக்கான முதலாவது கருநிலைச் சந்திப்பு ஏப்ரல் மாதம் 30ஆம் திகதி வவுனியாவில் இடம்பெற்றது. அதன் பின் தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும் கட்சிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஜுன் மாதம் 29ஆம் திகதி இறுதியாக்கப்பட்டது. அதன்பின் ஜுலை மாதம் 22ஆம் திகதி அந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை உத்தியோகபூர்வமாக கையெழுத்திடப்பட்டது.

அதன் அடிப்படையில் ஒரு பொதுக் கட்டமைப்பு இயங்கத் தொடங்கியது. அத் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பானது ஒருபொதுவேட்பாளரைகண்டுபிடிப்பதற்காக அன்றிலிருந்து இயங்கத் தொடங்கியது. கடந்த எட்டாம் திகதி ஒரு பொது வேட்பாளர் அறிவிக்கப்பட்டிருக்கிறார். அப்படிப் பார்த் தால் மொத்தம் 18 நாட்கள்தான் பொது வேட்பாளருக்கான தேடல் மும்முரமாக இடம்பெற்றது.

ஒரு சமூகத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயகரமான விதங்களில் தடம் மாற் றக்கூடிய ஒரு குறியீட்டு வேட்பாளரை கண்டுபிடிப்பதற்கு 18 நாட்கள் சென்றன என்பது ஒப்பீட்டளவில் குறைவுதான். அதற்காக 18 மாதங்களை எடுத்துக் கொண்டால் கூட குற்றமில்லை.

ஒரு பொது வேட்பாளர் ஒரு பொதுக் குறியீடு என்று தொடக்கத்திலிருந்தே கூறப்பட்டு வந்தது. அவ்வாறு ஒரு பொதுக் குறியீட்டை ஏன் தேட வேண்டி வந்தது? ஏனென்றால் தமிழ் மக்கள் மத்தியில் கட்சித் தலைவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. ஆனால் தமிழ் அரசியல் சக்தியை ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கவல்ல ஜனவசியமிக்க தலைவர்கள் அநேகமாக இல்லை. தமிழ் மக்களை ஆக்கக்கூடியபட்சம் ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் ஒரு பொதுக் கொள்கையின் கீழ் ஒன்றி ணைக்கவல்ல ஜனவசியமிக்க தலை மைகள் இருந்திருந்தால் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளருக்கு தேவையே இருந்திருக்காது. எனவே ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை தேடுவதில் உள்ள சவால் என்னவென்றால், தமிழ் மக்களை ஒரு பொதுக் குடையின் கீழ் ஒன்றிணைக்க வல்ல தலைமைகளுக்கு தட்டுப்பாடு உள்ளது என்பதுதான்.

இப்பொழுது தெரிவு செய்யப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் அவ்வாறு எல்லாத் தகமைகளும் உடையவர் என்று இக்கட்டுரை கூறவரவில்லை. அரசியலில் மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையில் எதிலுமே 100% பூரணமானது என்று எதுவும் கிடையாது. இருப்பவற்றில் சிறந்தவற்றை வைத்துத்தான் அரசியலைக் கொண்டு போகலாம். ஏனென்றால் அரசியல் எனப்படுவது சாத்தியக்கூறுகளின் கலை. சாத்தியக்கூறுகள் என்று பார்த்தால் இருக்கின்றவைகள்தான் சாத்தியக் கூறுகள். இல்லாதவைகள் அல்ல.

இந்த அடிப்படையில்தான் ஒரு பொது வேட்பாளரை பொதுக் கட்டமைப்பு முன் வைத்திருக்கின்றது. தமிழ்ப் பொது நிலைப் பாடு என்பது தமிழ்த் தேசிய நிலைப்பாடு தான். தமிழ்த்தேசிய நிலைப்பாட்டின் பிரதான மூலக்கூறு தாயக ஒருமைப்பாடு. அந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை உணர்வுபூர்வமாகவும் நடைமுறைச் சாத்தியமான விதத்திலும் ஒன்றிணைக்கும் தேவைகளை அடிப்படையாக வைத்து கிழக்கிலிருந்து ஒரு பொது வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

அவர் ஒரு குறியீடுதான். தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் காணப்படும் கருத்துருவாக்கிகள் ஒரு பொது வேட்பாளர் தொடர்பாக கட்டியெழுப்பிய கருத்துருவாக்கம் என்னவென்றால், கிழக்கிலிருந்து ஒரு பெண் வேட்பாளர்தான். அவரும் அரசியல் கட்சிகள் சாராதவராக இருந்தால் உத்தமம் என்று கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் அப்படி ஒரு பெண் வேட்பாளரைத் தேடிக் கண்டுபிடிப்பதில் நெருக்கடிகள் இருந்தன. மட்டுமல்ல, நாட்களும் குறைவாக இருந்தன. ஒரு பெண் வேட்பாளரைக் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் ஓர் ஆண் வேட்பாளரை அதாவது கட்சிசாரா ஆண் வேட் பாளரை கண்டுபிடிக்கலாமா என்று சிந்திக்கப்பட்டது. ஆனால் அங்கேயும் வரையறைகள் இருந்தன. அதன் பின்னர்தான் கட்சி சார்ந்த யாராவது இருப்பார்களா என்று தேட வேண்டி வந்தது.

ஜனாதிபதித் தேர்தல் பொறுத்து பொதுக் கட்டமைப்புக்கு சட்டரீதியாக சில வரையறைகள் இருந்தன. தேர்தலில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்தலாம். அல்லது ஒரு முன்னாள் அல்லது இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் சுயேட்சையாகக் களமிறங்கலாம். இந்த இரண்டு சாத்தியக்கூறுகளுக்குள்ளும்தான் ஒரு பொது வேட்பாளரைத் தேட வேண்டியிருந்தது. அதாவது தேர்தல் சட்டங்களின்படி ஒன்றில் பதிவு செய்யப்பட்ட ஒரு கட்சி வேண்டும். அல்லது முன்னாள் அல்லது இந்நாள் பாராளுமன்ற உறுப் பினர் வேண்டும்.

தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்புக்குள் பதிவு செய்யப்பட்ட கட்சிகள் உண்டு. ஈ.பி. ஆர்.எல்.எப் போன்ற கட்சிகள் அவ்வாறு சின்னத்தை தருவதற்குத் தயாராகக் காணப்பட்டன. சில கட்சிகள் தரத் தயங்கின. பொதுகட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒரு விடயம் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கட்சியின் சின்னத்தை ஒரு பொது நிலைப்பாட்டுக்காகப் பயன்படுத்தி அதன் மூலம் திரட்டப்பட்ட வாக்குகளையும் பிரபல்யத்தையும் அடுத்து வரும் தேர்தலில் அக்கட்சி தனது தனிப்பட்ட கட்சி தேவைகளுக்கு பயன் படுத்துவது தொடர்பாக ஓர் உடன்படிக்கை எழுதப்பட வேண்டும் என்று அங்கே சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் இந்த ஆண்டும் அடுத்த ஆண்டும் தேர்தல் ஆண்டுகளாகக் காணப்படும் ஓர் அரசியல் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலை உடனடுத்து வரக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தமது கட்சி சின்னத்தைப் பயன்படுத்தாமல் விடுவது தொடர்பில் கட்சிகள் அதிகமாக யோசித்தன.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், ஒரு சுயேச்சை வேட்பாளரைப் பொதுக் கட்டமைப்பு முன்நிறுத்தியமை என்பது கட்சிச் சின்னம் கிடைக்காத காரணத்தால் அல்ல. அதைவிட முக்கியமாக வடக்குக் கிழக்கு ஒருங்கிணைந்த தாயகத்தை பலப்படுத்த வேண்டும் என்ற நோக்கு நிலையில் இருந்துதான் என்று, தமிழ் மக்கள் பொதுச்சபையின் உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஒருவரை பொதுகட்டமைப்பின் வேட்பா ளராக நிறுத்துவது என்பது பரந்தகன்ற தளத்தில் கட்சிகளைக் கடந்த தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான அடித்தளமாகவும் அமையும்.

கடந்த 15 ஆண்டுகளாக கருத்துருவாக் கமாக காணப்பட்ட ஒரு விடயம், இப்பொழுது அடுத்த கட்ட வளர்ச்சிக்கு வந்து விட்டது. தமிழ்ப் பொது வேட்பாளர் பரந்தகன்ற தளத்தில் தமிழ் மக்களை ஒன்றுதிரட்டுவாராக இருந்தால், அதுவே கடந்த 15 ஆண்டுகளில் கிடைத்த மகத்தான வெற்றியாக அமையும்.

தமிழ்மக்கள் எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? சில நினைவு கூர்தல்களைத் தவிர மற்றெல்லா இடங்களிலும், எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாகப் பலவாக நிற்கிறார்கள். வடக்காக, கிழக்காக, சாதியாக, சமயமாக, கட்சிகளாக, கொள்கைகளாக தியாகிகளாக, துரோகி களாக கட்சிகளுக்குள் அணிகளாக் முகநூ லில் குழுக்களாக, திருச்சபைக்குள் அணிகளாக,

5ஆம் பக்கம் பார்க்க...

**இன ஒடுக்குமுறை எனப்படுவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகத் திரண்டிருப்பதை அழிப்பதுதான். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் காரணிகளை அழிப்பதுதான். அதனால், ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெரும் திரளாக, தேசிய இனமாக தமிழ் மக்களைத் திரட்டி எடுப்பதுதான் தேசியவாத அரசியல். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முடிவு அந்தக் கொள்கை வழிபட்டதே.**

நிலாந்தன்

# சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தரும் வேட்பாளருக்கு ஆதரவு!

## இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவிப்பு

சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வுதரத் தயாராகவுள்ள ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கத் தயாராக வுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இதனைச் சிங்கள மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின்மத்திய குழுக்கூட்டம் வவுனியாவில் நடைபெற்றது. கூட்டம் முடிவில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த சுமந்திரன் எம்.பி, தமிழ் மக்கள் சார்பாக தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழரசுக் கட்சியினுடைய நிலைப்பாடானது இணைந்த வட கிழக்கிலே சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வுடைய ஆட்சி முறை ஏற்படுத் தப்படுவதாகும்.

இதுவே எங்களுடைய அரசியல் நிலைப்பாடு. இதற்கு ஜனாதிபதி வேட்பாளர்கள் யாராவது இணங்கி வந்தால் அவர்களுக்கு ஆதரவு அளிக்கலாம் என்ற கருத்தும் கூட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது.

எனினும் இது தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

எமது கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு நாம் கூறி இருப்பாதானது அவர்களுடைய அரசியல் அறிக்கையில் எவ்வாறான செய்தியை சொல்கிறார்கள் என்று நாம் பார்க்கப்போகின்றோம்.

இது தொடர்பில் முழு நாட்டிற்கும் அவர்கள் எதனைச் சொல்ல வருகின்றார்கள் என்பது தொடர்பிலும் நாங்கள் பார்க்க இருக்கிறோம். எமது கோரிக்கைகளை ஏற்றால் அது தொடர்பில் விஷேசமாக சிங்கள மக்களுக்கு அவர்கள் தமிழர்களுக்கு எதைச் செய்யபோகிறோம் என்பதையும் அறிவிக்க வேண்டும்.

இது தவிர நாங்களும் எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து வடிவில் தெளிவான ஒரு அறிக்கையாக வெளியிடுவோம்.

எங்களுடைய மக்களுக்கு மக்களுடைய அரசியல் தலைமைத்துவம் வழங்குகின்ற கட்சி என்ற நிலைப்பாட்டில் அவ்வாறான ஒரு பொறுப்பை நாமும் உதாசீனம் செய்யாமல் வழிகாட்டல் அறிக்கை ஒன்றை ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வெளியிடுவோம்.

# அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களின் பலத்தைக் காட்ட இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும்



## பொது வேட்பாளர் தொடர்பில் க.வி.விக்னேஸ்வரன்

இலங்கை மத்திய அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இம்முறை ஜனாதிபதி தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை முன்வைக்கத் தீர்மானிக்கப்பட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மக்களின் கருத்தை வெளிப்படுத்துவதே இந்த ஜனாதிபதித் தேர்தலின் நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்கள ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முழுவதுமாக தமிழ் மக்களுக்காக ஒரு வேட்பாளரை முன்வைத்து இத்தனை நாட்களாக தமிழ் மக்களுக்கு காணப்படக்கூடிய பிரச்சினைகளை அந்த வேட்பாளர் மூலம் புரிய வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

சர்வதேசமும் அவை தொடர்பில் அறிந்து கொள்ள வேண்டும். எங்களுக்கான உரிமைகளை நாங்கள் முன்வைக்கத் தீர்மானித்துள்ளோம் என க.வி.விக்னேஸ்வரன் எடுத்துக் காட்டியுள்ளார்.

வெற்றி பெற முடியாவிட்டாலும் தமிழ் மக்களின் பலத்தைக் காட்ட இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# வெல்லும் ஜனாதிபதியையே தமிழர்கள் ஆதரிப்பர்



## கூறுகிறார் இராதாகிருஷ்ணன்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவையே வடக்கில் பெரும்பாலான தமிழர்கள் ஏற்பார்கள் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் ஈடுபட்டுவருகின்றனர் தமிழரசுக்கட்சியின் முடிவையே பெரும்பாலான தமிழர்கள் ஏற்பார்கள் வெல்லும் ஜனாதிபதியை ஆதரிக்கும் முடிவையே அவர்கள் எடுப்பார்கள் என நம்புகின்றோம். எமது பார்வையில் வெல்லும் ஜனாதிபதி சஜித் பிரேமதாஸ என்றார்.

# வாக்காளர் எண்ணிக்கையில் யாழ்.மாவட்டம் பின் தங்கல்

2019ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் அதிகரிப்பு வீதம் ஏனைய மாவட்டங்களை விட குறைவாகவே காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாக்காளர் அதிகரிப்பு வீதம் ஏனைய மாவட்டங்களை விட அதிகமாக காணப்படுகிறது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் வாக்காளர் அதிகரிப்பு வீதம் 5.04 வீதமாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில்12.9சதவீதமாகவுமுள்ளது.

வாக்காளர் அதிகரிப்பு வீதம் குறைந்த மாவட்டமாக கேகாலை மாவட்டம் 4.9 வீதத்துடன் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் கடைசிக்கு முதலிடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களை

4ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆலய அறங்காவலர் சபைகளுக்குள் அணிகளாக, பழைய மாணவர் சங்கங்களுக்குள் அணிகளாக் புலம்பெயர்ந்த நாடுகளில் அமைப்புகளாக அமைப்புக்களுக்குள் அணிகளாக... எல்லா இடங்களிலும் எல்லாவற்றிலும் தமிழ்மக்கள் இரண்டாகப், பலவாக நிற்கிறார்கள். எங்கே ஒன்றாக நிற்கிறார்கள்? ஒன்றாக நிற்கக்கூடாது என்பதில்தானே ஒன்றாக நிற்கிறார்கள்?

தன் பலம் எதுவென்று தெரியாமல் தன்னைத் தானே நம்பாமல் சிதறிக் கொண்டு போகும் ஒரு மக்கள் கூட்டத்தை அகக்கூடிய மட்டும் பெருந் திரளாகக் கூட்டிக்கட்டுவதுதான் தேசியவாத அரசியல். ஏனெனில் தேசம் எனப்படுவது ஒரு பெரிய மக்கள் திரளாகும். தங்களை தேசமாக உணரும் ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உணர்வே தேசியம் எனப்படுகின்றது. அக்கூட்டு உணர்வுக்கு தலைமை தாங்குவதுதான் தேசியவாத அரசியல். தமிழ் பொது வேட்பாளர் என்ற தெரிவின் முதன்மை நோக்கமும் அதுதான்.

ஒன்று திரண்ட தமிழ் மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்பதை வெளி உலகத்துக்கு ஒரே குரலில் கூறுவார்களாக இருந்தால், தமிழ் மக்களின் பேர பலம் அதிகரிக்கும். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 15 ஆண்டுகளாக இன அழிப்புக்கு எதிராக நீதி கிடைக்கவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை.

2009 மே மாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது ஆயுதப் போராட்டம்தான். அது ஒரு விளைவுதான். மூல காரண மாகிய ஒடுக்குமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது இன ஒடுக்கு முறை நிறுத்தப்படவில்லை. "இன ஒடுக்குமுறை எனப்படுவது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாகத் திரண்டிருப்பதை அழிப்பதுதான். தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் காரணிகளை அழிப்பதுதான். அதனால், ஒடுக்குமுறைக்கு எதிராக ஒரு பெரும் திரளாக தேசிய இனமாக தமிழ் மக்களைத் திரட்டி எடுப்பதுதான் தேசியவாத அரசியல். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முடிவு அந்தக் கொள்கை வழிபட்டதே."

எனவே தமிழ் மக்கள் முன் இரண்டே இரண்டு தெரிவுகள்தான் உண்டு ஒன்று ஒரு தேசமாகத் திரள்வது. அல்லது தன் பலம் எதுவென்று தெரியாத் தன்னைத் தானே நம்பாத ஒரு மக்கள் கூட்டமாகச் சிதறித் தூர்ந்து போவது.

# நீதியான விசாரணையை உறுதிப்படுத்துங்கள்!

## புலம்பெயர் அமைப்புகளும் சுகாதார அமைச்சுக்கு கடிதம்

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்களின் அசமந்தப் போக்கால் உயிர்பிரிந்ததாகக் கூறப்படும் இளம்தாய் சிந்துஜாவின் இறப்பு தொடர்பான விசாரணை யாவும் நீதியான முறையில் நடப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய இராஜ்சியத்தில் செயற்படும் மன்னார் நலன்புரி சங்கத்தினர் மற்றும் பிரான்ஸ் நாட்டில் செயற்பட்டு வரும் மன்னார் நலன்புரிசங்கத்தினர் உள்ளிட்டோர் இலங்கை ஜனாதிபதி மற்றும் இலங்கை சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அதில் மேலும் உள்ளதாவது: தவறிழைத்தவர்கள் மீது காலதாமதம் இன்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரசியல் ரீதியிலும்சரி நிர்வாக ரீதியிலும்சரி நீதியை நிலைநாட்டுவதில் எப்பொழுதும் தோற்றே போகிறது இலங்கையின் ஜனநாயகம்.

தொடர்ந்து உண்மைகளை மூடி மறைத்தால் அரச மருத்துவமனைகள் மீது மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். மன்னார் மருத்துவமனையில் உயிரிழந்த இளம் தாய் சிந்துஜாவின் மரணம் தொடர்பான விசாரணை மழுங்கடிக்கப்படுவதாக தெரியவருகின்றது. சம்பவத்தன்று பணியாற்றியவர்கள் மன்னார் மாவட்டத்திற்குள் உள்ளக இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக அறிகிறோம். ஆகவே நீதி மறுக்கப்படும் பட்சத்தில் மருத்துவமனைக்கெதிரான தொடர் போராட்டத்தை மேற்கொள்வோம் என்றுள்ளது.

# ரணிலின் தந்திரத்தில் அலைபடும் ஆடுகள்!





**புருஜோத்தமன் தங்கமயில்**

மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியல் வாரிசு தான் என்பதை நிரூபிப்பதற்காக தன்னுடைய 75ஆவது வயதிலும் ரணில் விக்ரமசிங்க கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். மாமன் - மருமகன் கட்சியாக அடையாளப்படுத்தப்படும் ஐக்கிய தேசியக் கட்சியில், அதிக காலம் தலைவராக இருந்தவர் என்ற வரலாற்றை ரணில் ஏற்கனவே படைத்துவிட்டார். இப்போது, தன்னுடைய மாமனார், நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்து அரங்கேற்றிய அத்து மீறல்களின் பாதச்சுவடுகளின் வழியைப்பற்றி தன் பயணத்தை மேற்கொள்ள எத்தனிக்கிறார்.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் மூர்க்கமான நகர்வுகளில் முக்கியமானது சிங்கள மொழியை மாத்திரம் ஆட்சி - நிர்வாக மொழியாக பிரகடனம் செய்தது. அதனை தென் இலங்கையில் இனவாதத் தீயாக மூட்டிப் பற்ற வைத்து பிரச்சாரம் செய்தவர்களில் முக்கியமானவர் ஜெயவர்த்தன. அப்போது, ஐ.தே.க.வில் இருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சமஷ்டிவாதியாக தன்னை முன்னிறுத்திக் கொண்டிருந்தார். ஆனால், அவர் ஐ.தே.க.வில் இருந்து பிரிந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்து ஆட்சி அதிகாரத்தை அடைவதற்காக பௌத்த அடிப்படைவாதிகளுடன் இணைந்து முழு இனவாதியாக மாறினார். அவரின் ஆட்சியில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சுதந்திர இலங்கையில் அரை நூற்றாண்டு காலம் பண்டாரநாயக்கவும் அவரது வாரிசுகளும் ஜெயவர்த்தனவும் அவரது வாரிசுகளும் ஆட்சி நடத்தியிருக்கிறார்கள். இப்போது, நீள்வது ராஜபக்ஷக்களின் தயவிலான ரணிலின் ஆட்சியென்றாலும், அவர் ஜெயவர்த்தனவின் வாரிசு. இந்த நாட்டை பேரழிவுக்குள் தள்ளியதற்கான பொறுப்பை, பண்டாரநாயக்க - ஜெயவர்த்தன தரப்பினர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், காலத்துக்கு காலம் அப்பாவி சிங்கள பெருங்குடிகளை இனவாதத்தீயைப் பரப்பி, தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு எதிராக திருப்பி விட்டுவிட்டு ஆட்சி செலுத்தி தின்று கொழுத்திருக்கிறார்கள். ஏதேச்சதிகாரத்தின் சர்வ சக்திகளாக இருந்திருக்கிறார்கள். இது, கறுப்பு யூலை மாதம், அதற்கான பொறுப்பை ஜெயவர்த்தனவும், அவரது அரசியல் வாரிசான ரணிலும் ஏற்க வேண்டும். அதுவும், ஜெயவர்த்தனவின் அமைச்சரவையில் இருந்த அப்போதைய இளம் அமைச்சரான ரணிலுக்கு, அரச பயங்கரவாதத்தின் கூட்டுப் பொறுப்பு உண்டு. அதனை அவர் ஒருபோதும் புறந்தள்ள முடியாது.



தற்போது செயற்பாட்டு அரசியலில் இருக்கும் அரசியல் வாதிகளில் மிகப்பெரும் தந்திரசாலியாக ரணில் பார்க்கப்படுகிறார். தங்களின் ஆட்சிக்காலம் முழுவதும் கட்சிகளையும், இயக்கங்களையும், பௌத்த பீடங்களையும் பிரித்தாண்ட ராஜபக்ஷக்களே, ரணிலின் பிரித்தாளும் தந்திரத்தின் முன்னால் அழுதுவடிக்கிறார்கள். ராஜபக்ஷக்கள் தோள் கொடுத்ததினால்தான், தனக்கு எப்போதுமே எட்டாக்கனியாக இருந்த ஜனாதிபதி பதவியை ரணில் அடைந்தார்.

ஆனால், ராஜபக்ஷக்களின் தோளில் அமர்ந்தவாறே, ராஜபக்ஷக்களின் தலையான பெரமுன என்கிற கட்சியை இரண்டாக பிளந்தவர் அவர். அதனை, இளைய ராஜபக்ஷவான நாமல் சில நாட்களுக்கு முன்னால் வெறுப்பின் உச்சத்தில் ஊடகங்களிடம் தெரிவித்தார். அதுவும், ரணில் ஏற்கனவே புலிகளை இரண்டாக பிரித்தவர் என்கிற உதாரணத்தையெல்லாம் கோடிக்காட்டியது, ராஜபக்ஷக்களின் வரலாற்றுச் சோகமே.

ரணில், ஜனாதிபதித் தேர்தலில் எப்படியாவது வென்றாக வேண்டும் என்கிற மூர்க்கத்தனத்துடன் செயற்படுகிறார். அவர், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளை உதாசீனம் செய்கிறார். அதுவும், பொலிஸ் மா அதிபர் விடயத்தில் அவர், பாராளுமன்றத்துக்குள் விடயங்களைத் தள்ளிவிட்டு தப்பிக்க நினைப்பதெல்லாம், அத்துமீறல்களின் உச்சம். நல்லாட்சிக் காலத்தில், மைத்திரிபால சிறிசேன, ராஜபக்ஷக்களுடன் இணைந்து சதிப்புரட்சி மூலம் ஆட்சி மாற்றமொன்றைச் செய்ய எத்தனித்தார். ஆனால், அப்போது அலரி மாளிகைக்குள் இருந்த ரணில், தன்னையொரு ஜனநாயகத்தின் காவலனாக - நீதித்துறை மீது நம்பிக்கை கொண்டவர் போல காட்டிக் கொள்வதில் குறியாக இருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்து மறைந்த இரா.சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் ரணிலுக்காக சதிப்புரட்சியை தோற்கடிப்பதற்காக உயர் நீதிமன்றத்தில் நீண்ட சட்டப் போராட்டங்களை நடத்தி, வென்று கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அதே ரணில், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுகளைப் புறந்தள்ளிவிட்டு, ஜெயவர்த்தனவின் வாரிசு தான் என்பதை நிரூபிக்கிறார்.

ராஜபக்ஷக்களின் கட்சியை இரண்டாக பிளந்துவிட்ட ரணில், தனக்கு எதிரான வெற்றி வேட்பாளர்கள் என்று கணிக்கப்படும் சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்கவை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் தற்போது கவனம்செலுத்திக் கொண்டிருக்கிறார். சஜித்தோடு இருந்த சரத் பொன்சேகாவை, பிரித்தெடுத்த ரணில், அவரை ஜனாதிபதி வேட்பாளர் வேடம் போட வைத்திருக்கிறார். அதன்மூலம், சஜித்துக்கு கிடைக்கும் வாக்குகளின் அளவைக் குறைக்கலாம் என்பது அவரது திட்டம். தேசிய மக்கள் சக்தியில் இருந்த சோசலிச முற்போக்கு இயக்கமொன்று கடந்த சில நாட்களுக்கு முன்னர், அதிலிருந்து விலகியது. அந்த இயக்கம், அநுர ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என்று பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டது. இப்படி ரணில் அனைத்துப் பக்கங்களிலும் இருந்தும் தனக்கு எதிரான

சக்திகளின் பலத்தை வெட்டிக் குறைப்பதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

ராஜபக்ஷக்கள் கட்சியை எப்படிக் காப்பாற்றுவது என்ற நிலைக்கு இப்போது தள்ளப்பட்டிக்கிறார்கள். அதுவும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு இடையிலேயே கண்ணாமூச்சி ஆட்டத்தை ரணில் தொடங்கிவிட்டார். பஷில் ராஜபக்ஷ ஒரு பக்கம் இழுக்க, மஹிந்த ராஜபக்ஷ தன்னுடைய மகனுக்காக போராட வேண்டியிருக்கின்றது. ராஜபக்ஷக்களின் பலமே, அவர்களின் சகோதரர்களுக்கு இடையிலான ஒற்றுமை. அவர்கள், தென் இலங்கை அரசியலில் பலம்பெற்று பெருஞ்சக்தியாக மாறியதும் அப்படித்தான். ராஜபக்ஷக்களை நாட்டு மக்கள் வீதிக்கு இறங்கி ஆட்சிக் கட்டிலில் இருந்து துரத்தியடித்தாலும், அவர்களுக்குப் பின்னால் திரள்வதற்கென்று மக்கள் கூட்டமொன்று இன்னமும் உண்டு. அவர்களினால் கூட்டத்தைச் சேர்க்க முடியும். இப்போது ஆட்சியைப் பிடிக்கும் வல்லமை இல்லாமல் இருக்கலாம், ஆனால் இன்னும் சில காலத்துக்குள் மீளவும் ஆட்சியை அடைவதற்கான வல்லமை அவர்களிடம் உண்டு. அதற்கு அவர்களின் ஒற்றுமை அவசியம். இப்போது, அதில்தான் ரணில் கல்லெறிந்து கொண்டிருக்கிறார்.



அடுத்த ஆட்சிக் காலத்தில் தனக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையோடு ரணில் பின்னால் பஷில் அலைந்து கொண்டிருக்கிறார். ஆனால், ரணிலோ பிடிகொடுக்காமல் அலையவிடுவதில் குறியாக இருக்கிறார். அத்தோடு, தன்னுடைய பிடிக்குள் இருந்து ராஜபக்ஷக்களை விலகிவிடாமலும் பார்த்துக்கொள்ள முயல்கிறார். இப்போது, பெரமுனவின் முப்பத்துக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், ராஜபக்ஷக்களிடம் ரணிலுக்காக அழுத்தம் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

மறைந்த சம்பந்தனின் மரணச் சடங்கில் கலந்து கொண்டிருந்த மஹிந்த, முன்னாள் ஊடகவியலாளர் ஒருவரிடம், தங்களிடம் பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளர் இல்லை என்று கூறியிருக்கிறார். வர்த்தகர் தம்மிக்க பெரெராவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தும் திட்டத்தை நாமல் உள்ளிட்டவர்கள் கொண்டிருந்தாலும், அது கட்சியை மிகமோசமாக உடைப்பதற்கு காரணமாக அமைந்துவிடும் என்று மஹிந்த நினைக்கிறார். அதனால்தான், தங்களிடம் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்ற விடயத்தில் அவர் இருப்பதற்கு காரணமாகும். ஆனால், இளம் கன்று பயமறியாது என்ற அடிப்படையில் நாமல், ரணிலுக்கு ஆதரவளிப்பதைக் காட்டிலும் தனித்து நின்று அடுத்த பொதுத் தேர்தலைக் குறிவைத்து நகர்வுகளை முன்னெடுக்க நினைக்கிறார். அதன்மூலம், பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை அடைய முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு. ஆனால், அந்த வாய்ப்புக்களை பெரமுனவின் ஒரு பகுதியினரையும் வைத்து ரணில் முறியடிக்கத் துடிக்கிறார்.

ஆட்சி அதிகாரத்துக்காக எந்த வகையிலான சதியாட்டத்தையும் ஆடலாம் என்பது விலங்குகளின் வேட்டை மனநிலையில் இருந்து வந்த உணர்வு. அதனை, ரணில் இப்போதும் தீர்க்கமாக நம்புகிறார். விலங்குகள் தங்களின் வயதான காலத்தில் மூர்க்கத்தனத்தை இழந்து வலுவிழந்து அனாதையாகி வீழும். ரணிலும் கடந்த பொதுத் தேர்தலில் அப்படித்தான் வீழ்ந்தார். ஆனால், அவருக்கு மீண்டும் உரமேற்றியது ராஜபக்ஷக்கள். அதற்கான விலையை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தற்போது ரணில் வேட்டையாடும் வல்லமையோடு இல்லையென்றாலும், மற்றவர்களை வைத்து வேட்டையாடி, அவர்கள் கொண்டு வருவதை ஆண்டு அனுபவிக்கும் இடத்தில் இருக்கிறார்.



ரணில் ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்ததும், அனைத்துக் கட்சிகளிலும் தனக்கான ஆட்களை மெல்ல மெல்ல தேடிக் கொண்டார். அதுபோல, அரசியலில் ஆளுமை செலுத்தும் சக்திகளையும் அடையாளம் கண்டு அரவணைக்கத் தொடங்கினார். பாராளுமன்றத்துக்குள் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்வுக்கான வாக்கெடுப்பிலேயே, தமிழ்த் தேசியவாதிகளாக தங்களை முன்னிறுத்திய கூட்டமைப்பின் உறுப்பினர்களை பிரித்தாண்டு, அவர்களின் வாக்குகளை ரணில் பெற்றிருக்கிறார். அதனை, அவர், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களிடத்திலேயே பெருமையாக தம்பட்டம் அடித்த காட்சிகள் எல்லாமும் அரங்கேறியது.

கூட்டமைப்பில் தீர்மானங்களை எடுத்து வந்த சம்பந்தனும் எம்.ஏ.சுமந்திரனும் தன்னுடைய இணக்கமான வட்டத்துக்குள் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட ரணில், கூட்டமைப்புக்குள் புதிய நட்புக்களைத் தேடத் தொடங்கினார். அதற்காக சலுகைகளை வழங்கினார். அதனை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடக்கம் பல வடிவங்களில் காணமுடியும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொடர்ந்தும் வழங்கப்பட்டுவந்த வரியற்ற வாகன இறக்குமதிக்கான தடை தற்போது உள்ளதால், பலரும் அல்லாடத் தொடங்கினர். இதனை, உணர்ந்து கொண்ட ரணில் அரசாங்கம் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மதுபான சாலைகளை அமைப்பதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டுகிறார். அந்த அனுமதிப்பத்திரங்களில் சில, தமிழ்த் தேசியம் பேசி, மாவீரர் நாளில் விளக்கேற்றி அஞ்சலித்து உணர்வு மேலிட நிற்கும் சில கூட்டமைப்பின் - தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதான தகவல்கள் வெளியாகின்றன. அந்தத் தகவல்கள், ஆதாரங்களோடு பொதுத் தேர்தல் பிரச்சார காலத்தில் உலாவரும் வாய்ப்புண்டு. இந்தச் சலுகைகள், ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஆதரிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் போக்கில் வழங்கப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

ஏற்கனவே, பிளவுண்ட கூட்டமைப்பின் ஒரு தரப்பினர் (ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி), தமிழ்த் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தூக்கிக் கொண்டு வந்த போதே பெரும் சந்தேகம் எழுந்தது. குறிப்பாக, சஜித்துக்கு கிடைக்கும் தமிழ் வாக்குகளை மடைமாற்றம் செய்யும் நோக்கத்தையே பொது வேட்பாளர் விடயம் நிறைவேற்றப் போகின்றது என்பது. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் சலுகை ஆதாயம் தேடும் அரசியல்வாதிகள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அதனை தங்களின் தலைமேல் தூக்கிச் சுமக்கும் சில அரசியல் பத்தியாளர்கள், தங்களின் தன்முனைப்பு மனநிலையினால், ரணிலுக்கான வெற்றி வாய்ப்பை அதிகரிப்பதற்கான வேலைகளில் மறைமுகமாக ஈடுபடுகிறார்கள்.

மலையக தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இன்னமும் பெருமளவான மக்கள் சஜித்தை ஆதரிக்கும் மனநிலையிலேயே இருக்கிறார்கள். ரணில் மலையக மக்களுக்கான சம்பள அதிகரிப்பு என்ற நாடகத்தை அரங்கேற்றி ஆதாயம் தேட முனைந்தார். ஆனால், அதனை தோட்டக் கம்பனிகள் நீதிமன்ற உத்தரவினூடு தடுத்து நிறுத்திவிட்டன. உண்மையாகவே தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பில் அக்கறை இருந்திருந்தால், முறையான தொழில் - அரசியல் தீர்மானங்களின் ஊடாக சம்பள அதிகரிப்பைச் செய்திருக்க வேண்டும். மாறாக, மேம்போக்கான தேர்தல் இலக்கு நகர்வுகளைச் செய்திருக்கமாட்டார்கள். அதிலும், சிறுபிள்ளை வேளாண்மை போன்று, ஜீவன் தொண்டமானைக் கொண்டு அவர் ஆடும் ஆட்டம் அபத்தமானது.

செம்டம்பர் 21ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெறும் காலத்துக்குள் இன்னும் ஏராளமான பிளவுகளையும், சதியாட்டங்களையும் ரணில் ஆடுவார். அதில், யார் மாட்டிக்கொண்டு மக்களை பகடைக்காய்களாக மாற்றப்போகிறார்கள் என்றுதான் தெரிய வில்லை. ●

**ராஜபக்ஷக்களின் கட்சியை இரண்டாக பிளந்துவிட்ட ரணில், தனக்கு எதிரான வெற்றி வேட்பாளர்கள் என்று கணிக்கப்படும் சஜித் பிரேமதாச மற்றும் அநுரகுமார திசாநாயக்கவை பலவீனப்படுத்தும் நடவடிக்கைகளில் தற்போது கவனச் செலுத்திக் கொண்டிருக்கிறார். சஜித்தோடு இருந்த சரத் பொன்சேகாவை, பிரித்தெடுத்த ரணில், அவரை ஜனாதிபதி வேட்பாளர் வேடம் போட வைத்திருக்கிறார். அதன்மூலம், சஜித்துக்கு கிடைக்கும் வாக்குகளின் அளவைக் குறைக்கலாம் என்பது அவரது திட்டம். தேசிய மக்கள் சக்தியில் இருந்த சோசலிச முற்போக்கு இயக்கமொன்று கடந்த சில நாட்களுக்கு முன்னர், அதிலிருந்து விலகியது. அந்த இயக்கம், அநுர ஜனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என்று பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டது.**



தேசியம்




**தொழிட்கட்சியின் ஒருமாத ஆட்சியின் பின்னர், கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப் போது மிகப் பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. இதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருவதாக தகவல் கள் வெளியாகியுள்ளன...**

# பிரித்தானியாவில் தீவிரமடையும் வலதுசாரிகளின் வன்முறை!

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

பிரித்தானியாவில் தீவிர வலதுசாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்த வன்முறைகளை நடத்துவதாக புதிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் கண்டித்துள்ளார்.

### மூன்று இளஞ் சிறுமிகள் கொலை:

கடந்த மாதம் ஜூலை 29ஆம் திகதியன்று பிரிட்டனின் சவுத்போர்ட் நகரில் நடைபெற்ற டெய்லர் சுவிஃப்ட் யோகா மற்றும் நடனப் பயிலரங்கில் கலந்து கொண்ட மூன்று சிறுமிகள் கொல்லப்பட்டனர்.

இதன்பின் இங்கிலாந்து மற்றும் வடக்கு அயர்லாந்தின் பல பகுதிகளில் வெளிநாடுகளில் இருந்து குடியேறுபவர்களுக்கு எதிராக மிகப் பெரிய போராட்டங்கள் வெடித்தன. இந்தப் போராட்டங்கள் பல இடங்களில் வன்முறையாக மாறின. இதனால் பிரிட்டன் முழுக்க கலவரம் ஏற்பட்டுள்ளது.

### ஒருமாத தொழிட்கட்சி ஆட்சி:

பிரித்தானியாவில் கடந்த ஜூலை மாதம் தான் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதில் ஆட்சியில் இருந்த கன்சர்வேடிவ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. எதிர்க்கட்சியாக இருந்த தொழிட் கட்சி மிகப் பெரிய வெற்றி பெற்ற நிலையில், கெய்ர் ஸ்டார்மர் பிரதமரானார்.

இதற்கிடையே தொழிட் கட்சிக்குச் சிக்கல் தரும் வகையில் இப்போது மிகப் பெரிய வன்முறை போராட்டங்கள் வெடித்துள்ளன. அதைச் சமாளிக்க முடியாமல் அரசு திணறி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### வன்முறைக்கு என்ன காரணம்:

கடந்த வாரம் வடமேற்கு இங்கிலாந்தில் உள்ள சவுத்போர்ட் என்ற இடத்தில் உள்ள குழந்தைகள் நடன வகுப்பில் திடீர் தாக்குதல் நடந்தது. இதில் மூன்று சிறுமிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். பிரிட்டனில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் குடியேறுவதே இதுபோன்ற தாக்குதல்களுக்குக் காரணம் எனக் கூறி அங்கே பல நகரங்களில் போராட்டங்கள் வெடித்தன.

மூன்று சிறுமிகள் உயிரிழக்கக் காரணமாக இருந்த அந்த தாக்குதலில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டில் இருந்து குடியேறியவர் என்றும் அவர் ஒரு இஸ்லாமியர் என்றும் தவறான தகவல் பரவியது. இதனால் குடியேற்றத்தை எதிர்க்கும் குழுக்கள் முஸ்லீம் எதிர்ப்பு குழுக்கள் திடீரென இந்த போராட்டங்களை ஆரம்பித்தன. அதுவே இப்போது வன்முறையாக மாறியுள்ளது.

அதேநேரம் இந்தச் சம்பவத்தில் கைதாகியுள்ள நபர் வெளிநாட்டைச் சேர்ந்தவர் இல்லை என்றும் அவர் பிரிட்டனில் பிறந்தவர் தான் என்றும் பொலிசார் விளக்கமளித்துள்ளனர். மேலும், கைதான நபரின் குடும்பம் கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றுவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருப்பினும், இதை ஏற்க மறுத்து அங்கே போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன.

இங்கிலாந்தில் லிவர்பூல், பிரிஸ்டல், ஹல் மற்றும் ஸ்டோக்-ஆன்-ட்ரென்ட் மற்றும் பிளாக்பூல் எனப் பல நகரங்களில் இந்த வன்முறை போராட்டங்கள் பரவியுள்ளன. இந்த விவகாரத்தில் பொலிசார் நூற்றுக்கும் மேற்பட்டோரை இதுவரை கைது செய்துள்ளனர்.

### வலதுசாரி இயக்க திட்டம்:

மான்செஸ்டர் மற்றும் பெல்ஃபாஸ்டில் தாக்குதல்கள் நடந்த நிலையில், கடைகள் மற்றும் வணிக நிறுவனங்கள் சூறையாடப்பட்டன. லிவர்பூலில் ஒரு நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. இந்த வன்முறையில் பொலிசார் பலரும் காயமடைந்துள்ளனர்.

இதற்கிடையே தீவிர வலதுசாரி இயக்கங்கள் திட்டமிட்டு இந்த போராட்டங்களை நடத்துவதாக அந்நாட்டின் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் விமர்சித்துள்ளார்.

மேலும், சிறுமிகள் உயிரிழக்கக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்த அவர், வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

### கன்சர்வேடிவ் கட்சியும் வலதுசாரிகளும்:

கன்சர்வேடிவ் கட்சியே இங்கிலாந்தை தீவிர வலதுசாரி வன்முறைக்கு திறந்துள்ளனர் என்ற குற்றஞ்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

தீவிர வலதுசாரி வன்முறைக்கு காரணம் கன்சர்வேடிவ்கள் என இங்கிலாந்து பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு முன்னாள் ஆலோசகர் டேம் சாரா கான், இவ்வாறு தெரிவித்த கருத்து பலத்த சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

### முன்னைய கன்சர்வேடிவ் அரசாங்கம்

கலாச்சார வெறுப்பு நிகழ்ச்சி நிரலுடன் தீயை மூட்டுவதன் மூலமும், நாட்டின் சில பகுதிகளில் வெடித்துள்ள தீவிர வலதுசாரி வன்முறைக்கு இங்கிலாந்தை பரந்த அளவில் திறந்துவிட்டதாக, டோரி பிரதம மந்திரிகளின் தீவிரவாதம் குறித்த மூத்த ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு மே மாதம் வரை ரிஷி சுனக்கின் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் மீள்தன்மைக்கான சுயாதீன ஆலோசகராக இருந்த டேம் சாரா கான், தெரசா மே மற்றும் போரிஸ் ஜான்சன் இருவரின் கீழும் தீவிரவாத எதிர்ப்பு ஆணையராக செயல்பட்டவர்.

தீவிர வலதுசாரிகள் சமூக ஊடகங்களில் வன்முறையைத் தூண்டுவதற்கு சட்டத்தில் உள்ள இடைவெளிகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.




11ஆம் பக்கம் பார்க்க...






# ஸ்ரீ வினிதா

# ஆயுத எழுத்தால் தடம் பதித்த மங்கை...

திருகோணமலை நகரைச் சேர்ந்த நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர் வினிதா உதயகுமார். தாய், தந்தை, சகோதரன் என்று சிறிய குடும்பம் ஆகும். இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை 2023ஆம் ஆண்டு நிறைவு செய்ததுடன் இன்று உலகளாவிய தளத்தில் தனது ஆக்கபூர்வமான எழுத்தால் பல நாவல்களை தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கும் 27 வயதுடைய இளம் எழுத்தாளராக இன்று தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். சுமார் 30க்கும் மேற்பட்ட நாவல்களை மூன்று ஆண்டுகளுக்குள் எழுதியுள்ளார். அதில் 16 நாவல்கள் இந்தியாவில் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. எழுத்துத் துறையில் தனக்கென புனைப் பெயரையும் வைத்துக்கொண்டு "ஸ்ரீ வினிதா" என்ற பெயரில் தொடர்ந்து எழுத்துத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

இவரது ஆக்கங்கள் அழகிய தமிழ் மகள், பிரதிலிபி, ஏந்திழை, அமேசான் போன்ற தளங்களிலும் ஸ்ரீ வினிதா தமிழ் ஆடியோ நாவல்கள் என்ற youtube தளத்திலும் மிர்ச்சி FMலும் காணப்படுகின்றன. இலங்கை தொடங்கி உலகம் முழுவதும் தனது படைப்புக்களை நிகழ்நிலைத் தளங்கள் ஊடாக வெளியிட்டுக் கொண்டிருக்கும் இளம் பெண் எழுத்தாளரான ஸ்ரீ வினிதா அவர்களுடனான நேர்காணல் இது.

**கே: ஒரு பட்டதாரியாக ஆரம்பித்த பயணம் எழுத்தாளராக மாறியதன் காரணம் என்ன?**

ப: தந்தையை இழந்த பின்னர் என் தாயாரின் தனிமையை போக்கிக் கொள்ள உதவிய வாசிப்புப் பழக்கம், என்னையும் கொஞ்சம் தழுவிக் கொண்டது. சாதாரண தர பரீட்சை எழுதியதன் பின்னர் எனது பொழுதுபோக்கு நேரங்களில் நாவல்களைத் தேடி வாசித்தேன். நான் முதன் முறையாக படித்த நாவல் "அது ஒரு மழைக்காலம்". அன்றிலிருந்து நாவல்களை வாசிப்பதில் தனி விருப்பம் எனக்கு ஏற்பட்டது. பல்கலைக் கழகங்களிலும் நிகழ்நிலைத் தளங்களிலும் ரமணிச்சந்திரன் அவர்களின் குடும்ப நாவல்களை தேடிவாசிப்பேன்.

எனது அனுபவத்தை சக நண்பர்களுடன் பகிர்ந்து கொள்வேன். அப்போதுதான் என்னை நாவல் எழுதுமாறு என் சக நண்பர்கள் ஊக்கப்படுத்தினர். வாசிப்பில் இருந்த ஆர்வமும் நீண்ட நாட்களாக நாவல்களை வாசிக்கும் பழக்கமும் என்னை நாவல்கள் எழுதுவதற்குத் தூண்டின. தமிழ் மொழியில் எனக்கிருந்த ஈடுபாடு என்னை மேலும் ஊக்கப்படுத்தியது.நாவல்கள் எழுதுவதில் சிரமங்கள் ஏற்படவில்லை.

**கே: உங்கள் முதல் நாவலான "வஞ்சம் ஏனோ வசீகரா"பற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா?**

ப: இந்தியத் தளமொன்றில் நாவல்களுக்கான பிழைத்திருத்தம் (Corrections) பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அத்தளத்தின் உரிமையாளர் எனது திறமையைப் பார்த்து அவர்களது தளத்திலேயே எனது ஆக்கங்களை வெளியிடுவதற்கான வாய்ப்பை அளித்தார். நான் எதிர்பார்க்காத வரவேற்பை எனது முதல் நாவல் பெற்றுத்தந்தது. முதன் முறையாக நாவலை பதிவிடும்போது சிறு பதற்றம் எனக்குள் தோன்றியது.காரணம் இந்திய மொழி நடையை கையாள்வது சற்று கடினமாக இருந்தது. இதனால் எனது முதலாவது நாவலில் ஆங்காங்கே இலங்கைத் தமிழையும் பயன்படுத்தியுள்ளேன். ஆனால் இன்று ஒன்றரை மாதத்தில் ஒரு நாவலை எழுதி முடிக்க முடிவதுடன், இந்திய மொழிநடையை என்னால் இலகுவாகவும் சிறப்பாகவும் கையாள முடியும்.

**கே: ஒரு எழுத்தாளராக நீங்கள் சாதித்த விடயம்?**

ப: அமேசான் என்பது யாவரும் அறிந்த உலகளாவிய தளமாகும். இதில் பல்லாயிரக்கணக்கான நூல்கள் பல்வேறு மொழிகளில் பதிவிடப்படுகின்றன.




அமேசான் தளத்தில் தமிழ் நூல்களில் மூன்று பிரிவுகளில் முதல் இடத்தை எனது நாவலான "ஊதாப்பூ காதலி" பெற்றது.இதைத் தொடர்ந்து பல நாவல்கள் பெஸ்ட் செல்லராக அமேசான் தளத்தில் தொடர் வரவேற்பை பெற்று அதிக வாசகர்களை எனக்கு ஈட்டித் தந்தன.இது என் எழுத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்று நான் கருதுகிறேன்.

**கே: தற்போது எழுத்துத் துறையில் உங்கள் இலக்கு என்ன?**

ப: ஐந்து ஆண்டுகளில் 100 நாவல்களை எழுதி வெளியிட வேண்டும் என்பதே என்னுடைய தற்போதைய இலக்காகும். எழுத்து துறைக்கு வந்து மூன்று ஆண்டுகளில் நான் 32 நாவல்களை எழுதியுள்ளேன்.

**கே: எழுத்துத் துறையில் நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் என்ன?**

ப: எழுத்துத் துறையில் இடைவிடாது பயணித்தல் மிக அவசியமாகும். ஏனெனில் போட்டியாளர்கள் நம்மை முந்தி செல்லக்கூடும். வாசகர்களுக்கும் அவர்களது எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் நான் நாவலை எழுத வேண்டும்.வாசகர் வட்டத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக முழு முயற்சியுடன் செயலாற்ற வேண்டும். இதனால் எனது அன்புக்குரியவர்களுடன் குடும்பத்தாருடன் என்னால் நேரத்தை அதிகம் செலவழிக்க முடியாதுள்ளது.

இலங்கை எழுத்தாளர்களது படைப்புகளை அமேசான் தளத்தில் சுயாதீனமாக வெளியிட முடியாதுள்ளது. காரணம், இலங்கை கணக்கை அமேசான் ஏற்றுக்கொள்வதில்லை.எமக்கு தெரிந்தவர்கள் வேறு நாட்டில் இருப்பார்களாயின் அவர்களின் உதவியுடன் வெளிநாட்டு வங்கிக் கணக்கின் ஊடாக நூல்களை பதிவிட முடியும்.இது இலங்கை எழுத்தாளர்களுக்கு பாரிய தடையாகும்.இதனால் இலங்கை எழுத்தாளர்களுக்கான வாய்ப்பானது குறுகிய வட்டத்திற்குள்ளேயே முடக்கப்படுகிறது.

**கே: உங்கள் நாவல்களில் ஈழம் சார்ந்த போர் அனுபவங்கள் காணப்படாமைக்கான காரணம்?**

ப: இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் குறித்து நாவல் எழுத வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. இருப்பினும் சில நாடுகளில் உள்ள தணிக்கை சார்ந்த விடயங்களாலும் கட்டுப்பாடுகளாலும் போர் அனுபவம் குறித்து வெளிப்படையாகவும் சுதந்திரமாகவும் என்னால் எழுத முடியவில்லை. எனது நூல் உலகளாவிய தளங்களில் பதிவேற்றப்படுவதால் சில கட்டுப்பாடுகள் இதில் தாக்கம் செலுத்துகிறது. இருப்பினும் எதிர்காலத்தில் எமது போர் சார்ந்த அனுபவங்களை கொண்ட நாவலை எழுதத் திட்டமிட்டுள்ளேன்.

**கே: எழுத்துத் துறையில் கடந்த மூன்று ஆண்டுகள் பயணம் பற்றி கூறுங்கள்.**

ப: எனது இரண்டு வயதிலேயே என் தந்தையை இழந்தேன். தந்தையை இழந்த என் குடும்பத்திற்கு வருமான ரீதியாக பல சவால்கள் ஏற்பட்டன.ஒரு தந்தை இருந்திருந்தால் குடும்பத்திற்கு எவ்வாறு பக்கபலமாக இருப்பாரோ, அந்த ஆறுதலையும் மன தைரியத்தையும் அனைத்து வகையிலும் எழுத்துத் துறை எனக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. என் குடும்பத்திற்கு வருமானம் கிடைப்பதற்கு

11ஆம் பக்கம் பார்க்க...



ச.தனுஷ்கா
ஊடகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

# சவாலை முறியடிப்பதே மக்கள் பொறுப்பு!

**என்.கண்ணன்**

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.







1982ஆம் ஆண்டுக்குப் பின்னர், ஜனாதிபதி தேர்தலில் வெற்றிவாய்ப்பு இல்லை எனத் தெரிந்திருந்தாலும் தமிழர்கள் பலர் போட்டியிட்டிருக்கிறார்கள்.

1982ஆம்ஆண்டுஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கு எதிராக, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவராக இருந்த குமார் பொன்னம்பலம் போட்டியிட்டிருந்தார்.

அவர் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடவில்லை, அப்போது பலமான கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் அவருக்கு ஆதரவு வழங்கவில்லை. ஆனாலும் அவரால் 173,934 வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அதற்குப் பிறகு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இரண்டு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார்.

அவர் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டபோது, அவரது சொந்தக் கட்சியான ரெலோ கூட அவருக்கு ஆதரவு அளிக்கவில்லை. ஆனாலும், 2010ஆம் ஆண்டில் 9,662 வாக்குகளையும் 2019ஆம் ஆண்டு 12,256 வாக்குகளையும் பெற்றிருந்தார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் எமது தேசிய முன்னணி கட்சியின் சார்பில் போட்டியிட்ட சுப்பிரமணியம் குணரத்தினம் 7,333 வாக்குகளை பெற்றிருந்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட தமிழர்கள் ஏதேனும் ஒரு கட்சியின் வேட்பாளராக அல்லது சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டிருக்கிறார்களே தவிர, தமிழ் கட்சிகளின் பொது வேட்பாளர் என்ற நிலையில் போட்டியிடவில்லை. அவ்வாறு போட்டியிடுகின்ற முதல் சந்தர்ப்பம் இதுதான். இவ்வாறான நிலையில், தமிழ் பொது வேட்பாளர் ஏன் போட்டியிட வேண்டும் என்று சந்தேகம் சாதாரண மக்கள் மத்தியில் இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது.

ஏனென்றால், இதுவரை காலமும் அதாவது 2010ஆம் ஆண்டில் இருந்து, தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக பார்க்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு, யாரேனும் ஒரு சிங்கள வேட்பாளரைக் கைகாட்டி அவருக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டது. அதற்கமைய கணிசமான மக்கள், 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவுக்கும், 2015ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேனவுக்கும், 2019ஆம் ஆண்டு சஜித் பிரேமதாசவுக்கும் வாக்களித்தனர்.

இவ்வாறான நிலையில் இந்த முறை ஏன். தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும்? என்ற கேள்வி பலருக்கு காணப்படுகிறது.

கற்றறிந்தவர்கள் மத்தியிலேயே இவ்வாறான சந்தேகம் நிலவுவதை அவதானிக்க முடிகிறது. இது தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்துகின்ற தமிழ் தேசிய தரப்புகளுக்கு முன் இருக்கின்ற மிகப்பெரிய ஒரு சவால் என்பதில் சந்தேகம் இல்லை.

கடந்த காலங்களில் தமிழ் தேசியத்துக்காக வாக்களித்தவர்கள், மத்தியில் இவ்வாறான கேள்வி இருக்கிறது என்றால் அது நிச்சயமாக தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை.

தமிழ்ப்பொது வேட்பாளரை நிறுத்துவதை விட, அவரை ஏன் நிறுத்துகிறோம் என்பதை தெளிவுபடுத்துவது முக்கியமானது. அந்த விடயத்தில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் தரப்புகள் சரியாகப் பணியாற்றவில்லை என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த கருத்து எதிர்மறை நோக்கில் பதிவு செய்யப்படவில்லை. தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவது உறுதியாகிவிட்டது. நீரில் இறங்கிய பின்னர், நீந்துவதா மூழ்குவதா என்பதை தீர்மானிக்க வேண்டிய கட்டம் வந்துவிட்டது. இந்த கட்டத்தில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருப்பொருளை வெற்றிபெற வைப்பதற்கு ஆக்கக்கூடிய முயற்சிகள் தேவைப்படுகிறது என்பதை யாரும் மறக்கமுடியாது.

இவ்வாறான நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்பதன் அடிப்படை காரணத்தை சரியாக புரிய வைக்க வேண்டியது அவசியம். இதற்கான முயற்சிகள் ஊடகங்களின் மூலம் முன்னெடுக்கப்படுவதால் மாத்திரம் போதாது. இன்றைய நிலையில் பாரம்பரிய ஊடகங்கள், மக்கள் மத்தியில் செலுத்துகின்ற செல்வாக்கை விட, சமூக ஊடகங்கள் செலுத்துகின்ற தாக்கங்கள் அதிகம்.

திடீர் தலைவர்களை உருவாக்குவதும், கலகங்களை ஏற்படுத்துவதும், ஆட்சிகளை அகற்றுவதும், மாற்றங்களை ஏற்படுத்துவதும் இன்று சமூக ஊடகங்களின் கைகளிலேயே இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வாறான நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற நோக்கத்தை, தமிழ் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அந்த நோக்கத்தை வெற்றி பெற வைப்பதற்கும் சமூக ஊடகங்களின் ஊடான பிரசாரம் முக்கியமானது.

அதனை இளம் சமூகத்தினாலேயே முன்னெடுக்க முடியும். அவர்களின் கைகளில் உள்ள அலைபேசிகளை இதற்காக எவ்வாறு பயன்படுத்தலாம். இந்தப் பக்கத்தின் ஊடாக தமிழ்ப் பொது வேட்பாளரின் கொள்கைகளை எந்தளவுக்கு மக்கள் மத்தியில் கொண்டு செல்லலாம் என்று யாரும் சிந்தித்ததாக தெரியவில்லை.

அது போன்று தமிழ்ப் பொது வேட்பாளர் ஏன் களம் இறக்கப்படுகிறார் என்று மக்கள் மத்தியில் விளக்கம் அளிக்கின்ற செயற்பாடுகளையும் தீவிரமாக முன்னெடுக்க வேண்டியிருக்கும். அதற்காக இருக்கின்ற காலம் மிகக் குறுகியது.

இந்த குறுகிய காலகட்டத்திற்குள் அதிகளவானோரை ஒன்று திரட்டி, வீடு வீடாக மற்றும் குழுக்களாக, பிரசாரம் செய்தும், கூட்டங்களை நடத்தவும், நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இதனை செய்யாமல் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற திட்டத்தை வெற்றி பெற வைக்க முடியாது.

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள் மத்தியில் ஒரு வெறுமை நிலை காணப்படுகிறது. அவர்கள் மத்தியில் சுறுசுறுப்பு இல்லை. பரந்துபட்ட கட்டமைப்புகள் இல்லை. கிராமிய ரீதியான தொடர்பாடல் அலுவலகங்கள் இல்லை.

வெளிப்படையாக சொல்வதானால், கட்சிகளின் தலைமைக்கும் அடிமட்டத்தில் உள்ள உறுப்பினர்கள் அல்லது பொது மக்களுக்கும் இடையில் சரியான தொடர்பாடல்கள் கூட கிடையாது. இவ்வாறான சூழலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற கொள்கையை முன்னிறுத்தி தேர்தலில் போட்டியிடுவது கடினமான ஒரு முடிவு தான்.

ஆனாலும் அந்த கடினமான சூழலை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தேசிய தரப்புகள். முடிவுசெய்துவிட்டன.

இத்தகைய கட்டத்தில் ஏன் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியில் இறக்கப்படுகிறார். என்ற தெளிவு கூட தமிழ் மக்கள் மத்தியில் இல்லாமல் இருப்பது, அவர்களின் தவறு அல்ல. அவ்வாறான தெளிவுபடுத்தல்களை சரியாக முன்னெடுக்காத தவறு தலைமைத்துவங்களிடம் தான் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த குறைபாடு மிகக் குறுகிய காலத்தில் திருத்திக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று. ஏனென்றால் இந்த தவறு திருத்தப்படாது போனால் அது தமிழ்ப் பொது வேட்பாளரின் வாக்குகளின் மீது பாதிப்பை ஏற்படுத்தும். தமிழ் மக்கள் ஒரு திரட்சியாக இல்லை. சிதைந்து போய் இருக்கிறார்கள், சிதறி போய் விட்டார்கள் என்பது உறுதியாகிவிடும்.

அது தமிழ் மக்களை, அவர்களின் உரிமை. சார்ந்த விடயங்களை, துண்டு துண்டாகக்கையாளுகின்ற முடிவை சிங்கள தலைமைகள் எடுப்பதற்குகாரணமாக அமைந்துவிடும். பிரித்தாளும் தந்திரம் எப்போதும் சிங்களத் அரசியல் தலைமைகளால் பயன்படுத்தப்பட்டு வந்திருக் கிறது. அதற்கு தமிழ் அரசியல்வாதிகள் எல்லா காலகட்டங்களிலும் சோரம் போய் இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் வாக்குகள் ஒன்றாக திரட்சி அடையாது போனால், சிறு சிறு அரசியல் கட்சிகளைக் கொண்டு சிங்கள அரசியல் தலைமை தமிழ் மக்களின் பிரதான பிரச்சினையை மறைத்து விடும். காலப்போக்கில் தமிழ் மக்களின். போராட்டம், கொள்கைகள், அபிலாசைகள் எல்லாவற்றையுமே குழிதோண்டி புதைப்பதற்கு அது காரணமாகிவிடும்.

அத்தகைய நிலையைத் தடுக்க வேண்டுமானால், தமிழ்ப்பொது வேட்பாளரை தம் முன்னிறுத்தும் பிரசாரங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட வேண்டும். அந்த இலக்கை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றுவதற்கு, தமிழ்த்தேசிய அரசியல் தரப்புகள் எந்தளவுக்கு தயாராக இருக்கின்றன?

"தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதை விட, அவரை ஏன் நிறுத்துகிறோம் என்பதை தெளிவுபடுத்துவது முக்கியமானது. அந்த விடயத்தில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் தரப்புகள் சரியாகப் பணியாற்றவில்லை"

●



# சமூகக் கடமை உணர்ந்து எழுதுவதே எழுத்தாளனின் உயரிய நோக்கமாகும்!

## பிரிஸ்பேர்ன் நூல் வெளியீட்டில் ஐங்கரன் விக்கினேஸ்வரா உரை!



அவுஸ்திரேலியா, பிரிஸ்பேர்னில் உள்ள மவுண்ட் ஓமாணி நூலக *(Mt Ommaney Library)* மண்டபத்தில் ஆகஸ்ட் நாலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 'பாலஸ்தீனம் எரியும் தேசம்', 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்', 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு நடைபெற்றது.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் வாழ்த்துரையை ஈழத்தின் மூத்த பெண் எழுத்தாளர் 'தாமரைச் செல்வி' திருமதி.ரதிதேவி கந்தசாமி அவர்கள் ஆற்றினார். அத்துடன் தமிழ் வாழ்த்துப் பாடலை பிரிஸ்பேர்ன் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் சிறப்புற பாடினர்.

இந்நிகழ்வின் தலைமையுரையை அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் மூத்த செயற்பாட்டாளர் செந்தில் குமரன் அவர்கள் ஆற்றினார். பின்னர் "பாலஸ்தீனம் எரியும் தேசம்" நூல் அறிமுகவுரையை இலக்கிய ஆர்வலர் சிவா கைலாசம் நிகழ்த்தினார்.

அதன்பின் "ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்" நூலின் அறிமுகவுரையை டாக்டர்.துஷ்யந்தன் திசைநாயகம் அவர்கள் ஆற்றினார். இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை ரஜினிகாந்த் ஜெயராமன் அவர்கள் தமிழக இலக்கிய ஆர்வலராக இருப்பினும், ஈழத்து ஊடகவியலைப் பற்றி சிறப்புற உரை நிகழ்த்தினார். இந்நிகழ்வினை பிரிஸ்பேர்ன் சுதா சிறப்புற தொகுத்து அளித்தார்.





அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், குயின்ஸ்லாந்து கிளையின் அனுசரணையில் நடைபெற்ற இந்நூல்கள் வெளியீட்டு இலக்கிய அரங்கில் பெருந்திரளான பிரிஸ்பேர்ன் வாழ் தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

ஏற்புரையை நூலாசிரியர் ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்தினார். தமிழின் பெருமையை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது. என்று எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், புத்தக வாசிப்பு என்பது மிக முக்கியம் ஆகும். புத்தகங்கள் நம்மை சரியான திசையில் அழைத்து செல்லும் படிக்க, படிக்க சிந்தனைகள் விரிவாகும். புத்தகம் படிப்பதனால் நமது எதிர்கால தலைமுறையினர் சரியான திசையில் அழைத்து செல்லப்படுவார்கள் என நம்பலாம்.

எழுத்தாளர்களின் எழுத்துக்கள் சமூக சிந்தனையை மேம்படுத்துகிறது. அத்துடன் சமூக மக்களின் நலனுக்காக எழுத்தாளர்கள் எழுத வேண்டிய கடமையும் உள்ளது, என்று எழுத்தாளர் ஐங்கரன் விக்கினேஸ்வரா குறிப்பிட்டார்.

புலம்பெயர் மண்ணில் தமிழை மீட்டெடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். நமது மொழி, கலாசாரம் அழிந்து போய் விடக்கூடாது. அதற்கு எழுத்தாளர்களின் பங்களிப்பு அவசியம்.

நமது ஈழத்து இலக்கியம், கருத்தாளம்மிக்க படைப்புக்கள் தமிழின் பெருமையை வெளிக்காட்டுகின்றன. அவற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் கடமை நமக்கு உள்ளது என ஐங்கரன் விக்கினேஸ்வரா தெரிவித்தார்.

---

### பிரித்தானியா...

8ஆம் பக்கத்தொடர்ச்சி...

அதே நேரத்தில் பல அரச நிர்வாகங்களின் உயர்மட்ட அரசியல் வாதிகள் கலாச்சாரப் வெறுப்புகளை நடத்துவதன் மூலம் ஆதாயத்தைப் பெற முயன்றனர் என கான் கூறியுள்ளார்.

**இங்கிலாந்து பிரதமர் கண்டனம்:**

இங்கிலாந்தின் பிரதம மந்திரி கெய்ர் ஸ்டார்மர் தீவிர வலதுசாரி வன்முறைகளை கண்டனம் செய்தார், பல நாட்கள் வன்முறையான குடியேற்ற எதிர்ப்பு போராட்டங்கள் ஹோட்டல் மீதான தாக்குதலில் உச்சக்கட்டத்தை அடைந்தன. குற்றவாளிகள் சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்வார்கள் என்று கூறினார். இந்த வார இறுதியில் நாங்கள் கண்ட தீவிர வலதுசாரி வன்முறையை நான் முற்றிலும் கண்டிக்கிறேன் என்று பிரதமர் ஸ்டார்மர் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்த வன்முறையில் பங்கேற்றவர்கள் சட்டத்தின் முழு வலிமையையும் எதிர்கொள்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

**2011 வன்முறையின் பின்னர்:**

அவர்களின் தோல் நிறம் அல்லது மத நம்பிக்கைகள் காரணமாக இந்த கோளாறு மக்களை குறிவைத்ததாக அவர் கூறினார். மேலும் இங்கிலாந்தின் தெருக்களில் ஒழுங்கீனத்தை சட்டப்பூர்வமாக்க எந்த வழியும் இல்லை என்றார்.

கன்சர்வேடிவ் கட்சிக்கு எதிராக தனது தொழிற்கட்சி ஒரு தீர்க்கமான தேர்தல் வெற்றியைப் பெற்ற பின்னர் ஒரு மாதத்திற்கு முன்பு பிரதமராக பதவியேற்றார் ஸ்டார்மர்.

பிரித்தானியைவைப் பொறுத்தவரைக் கடந்த 2011இல் கடைசியாக மிகப் பெரிய வன்முறை ஏற்பட்டது. அப்போது லண்டனில் கறுப்பினத்தவர் ஒருவரை பொலிசார் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து பல ஆயிரம் பேர் வீதிகளில் இறங்கி போராட்டங்களை நடத்தினர். அப்போது சில இடங்களில் வன்முறைகள் வெடித்தன. சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பாரிய வன்முறை வெடித்துள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.

### ஆயுத எழுத்தால்...

9ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு வகையில் இந்த எழுத்துத் துறையும் காரணமாகும். வருமானத்தை கடந்து எனது தனிப்பட்ட திறனை வளர்ப்பதற்கும் நான் யார் என்பதை அடையாளப்படுத்துவதற்கும் பக்க பலமாக இருந்தது எழுத்துத்துறையாகும்.இன்று இந்தியாவில் பலர்க்கு என் நாவல்கள் பற்றி தெரியும், மிர்ச்சி எப்எம் *(Merchy Fm)* முதல் ஏந்திழை, அமேசான் தளம் போன்றவற்றில் தொடர்ந்து நாவல்களை வெளியிட்டு வருகிறேன்.இந்தியாவில் 16க்கும் மேற்பட்ட நாவல்களை புத்தகமாக வெளியிட்டுள்ளேன். பல்கலைக்கழகப் பட்டதாரி என்னும் அடையாளத்திற்கு அப்பால் என்னை ஒரு எழுத்தாளராக இந்த உலகிற்கு அறிமுகப்படுத்தியது இந்த எழுத்து துறையாகும்.

**கே: உங்கள் எழுத்து நடை வேறுபட்டு இருப்பதற்கான காரணம் என்ன?**

**ப:** ஒவ்வொரு நாவலும் வித்தியாசமாக இருக்க வேண்டும் என எண்ணுவேன். ஒரே கருவையும்,ஒரே பாணியில் தொடர்ந்து எழுவதில் எனக்கு ஈடுபாடு இல்லை. எனவே ஒரு எழுத்தாளராக அனைத்து விடயங்களையும் உள்வாங்குதல், புதிய விடயங்களை கற்றுக் கொள்ள தினமும் முயற்சிப்பேன். இதனாலேயே எனது ஆக்கங்களில் திகில், நகைச்சுவை,குற்றங்கள் மற்றும் த்ரில்லிங், காதல், பெண்ணியம் என பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**கே: உங்களைப் போன்று சாதிக்க விரும்பும் பெண்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

**ப:** பெண்கள் சுதந்திரமாகவும், பிறரில் தங்கி வாழாது பழகிக்கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் வருமான ரீதியாக ஒவ்வொரு பெண்களும் தம்மை வலுப்படுத்திக் கொள்வது மிக அவசியமாகும். வீட்டிலுள்ள பெண்களுக்கு சாதிக்கும் வாய்ப்புகள் மிக அதிகமாகவே காணப்படுகிறது. முதலீடு இன்றி தமது தனிப்பட்ட திறனையும் வாசிப்பு பழக்கத்தையும் திறம்பட செய்வதன் மூலம் தாமும் ஆக்கங்களை வெளியிடலாம். குடும்ப கஷ்டங்களால் முடங்கியுள்ளவர்கள், கல்வியை இடை நிறுத்தியவர்கள் என ஒவ்வொரு பெண்களுக்குள்ளும் ஒரு எழுத்தாளரோ தனிப்பட்ட திறனோ நிச்சயமாக இருக்கும். பெண்கள் அதனை சரியாக இனங்கண்டால் வாழ்வில் தலை நிமிர்ந்து வெற்றிநடை போடலாம்.



அ.கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



**We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.**

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

| சுன்னாகம் | நெல்லியடி | பருத்தித்துறை |
|---|---|---|
| 021 224 2022 | 021 226 0700 | 021 226 1100 |
| ஆவரங்கால் | சித்தங்கேணி | சாவகச்சேரி |
| 021 222 6688 | 021 225 2500 | 021 227 0700 |

| பூநகரி | முழங்காவில் | விஸ்வமடு |
|---|---|---|
| 021 320 1818 | 021 300 6544 | 021 320 1515 |
| மன்னார் | கிளிநொச்சி | வவுனியா |
| 023 225 1656 | 021 228 5505 | 024 222 7777 |







இப்பத்திரிகை 15.08.2024 அன்று இல.12/1 செங்குந்த அங்காடி, பருத்தித்துறை வீதி, யாழ் / நல்லூர் பணிமனையில் உள்ள அகரவ் பப்ளிசிங் மீடியா பிறிண்டிங் ஹவுஸ் (பிறைவேற் லிமிட்ரெட்) நிறுவனத்தினரால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.